# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத் தேர்வு – கல்வியாண்டு 2005-2006**
**தமிழ்மொழி**
**வினாத்தாள்-பகுதி 1**

**ஆண்டு 7** சுட்டெண்.................................... **நேரம்: 30 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும். மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூடு இடப்பட்ட விடைத்தாளில், விடைக்கான இலக்கத்தின் மீது புள்ளடி (X) இடுக.**

1. தமிழில் உள்ள உயிரெழுத்துக்களின் எண்ணிக்கை
   (1) 30 (2) 18 (3) 12 (4) 247

2. தமிழுக்கே உரிய சிறப்பு ஒலி
   (1) ச (2) ழ (3) ஞ (4) ல

3. நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், இசை என்பனவற்றைக் குறிக்கும் சொல்
   (1) இயல் (2) அழகு (3) நுண்கலை (4) பண்பாடு

4. தமிழர் கலைகளை எத்தனையாக வகுத்தனர்
   (1) 50 (2) 64 (3) 3 (4) 12

5. கைம்மாறு கருதாதவர்கள் செய்த உதவியின் பயன் எத்தகையது?
   (1) கடலிற்பெரிது (2) நிலத்திற்பெரிது (3) செல்வத்துள்பெரிது (4) ஆற்றிற்பெரிது

6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதால் உணர்வது
   (1) அன்பு (2) செல்வம் (3) ஒற்றுமை (4) கல்வி

7. பாடுகின்றான் என்ற வினைச்சொல் காட்டும் காலம்
   (1) நிகழ்காலம் (2) எதிர்காலம் (3) இறந்தகாலம் (4) முக்காலம்

8. பெயரெச்சம் ஒன்று,
   (1) பாடி (2) விழுந்து (3) ஆடினாள் (4) ஓடிய

9. பைல் கோட்டையைக் கட்டியவர்கள்,
   (1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கேயர் (3) ஆங்கிலேயர் (4) சிங்களவர்

10. சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெறக் கூடியவர்
    (1) மன்னன் (2) கல்விகற்காதவன் (3) மாசறக்கற்றோன்
    (4) மாசுடன்கற்றோன்

11. சிங்கத்தைப் போய்ப் பார்ப்போமெனக் கூறிய மிருகம்
(1) நரி (2) கரடி (3) பன்றி (4) முயல்

12. நாம் எதை அடக்காவிட்டால் சொற்குற்றத்துக்கு ஆளாகுவோம்
(1) பணம் (2) நிலம் (3) கை (4) நா

13. ஆற்று நீர் எவ்வாறு ஓடியது
(1) சலசல (2) திருதிரு (3) பளபள (4) கடகட

14. சினங்காத்தலைப் பற்றிக் கூறும் நூலை எழுதியவர் :
(1)பாரதியார் (2) ஔவையார் (3) திருவள்ளுவர் (4) சண்முகலிங்கம்

15. "ஆறுவது சினம் " என்று கூறும் நூல் :
(1)திருக்குறள் (2) கொன்றைவேந்தன் (3) தேவாரம் (4) ஆத்திசூடி

16. அறிவுக்குப் பகையானது :
(1)சினம் (2) அன்பு (3) கடன் (4) நட்பு

17. நல்லவர்க்குச் செய்த உதவி எத்தகையது?
(1)நீர்மேல்எழுத்து (2)கைமேல்எழுத்து (3)தாள்மேல்எழுத்து (4)கல்மேல்எழுத்து

18. வளவன் புத்தகங்களை எடுத்து வைத்தான். இதில் உள்ள செயப்படுபொருள்
(1)வளவன் (2) புத்தகங்கள் (3) எடுத்து (4) வைத்தான்

19. பூனை பந்தை உருட்டி விளையாடியது. இதிலுள்ள அடைமொழி
(1) பூனை (2) பந்து (3) விளையாடியது (4) உருட்டி

20. வடஇலங்கைத் தமிழரசுகளின் வன்னித் தலைநகர்
(1) பூநகரி (2) ஆனையிறவு (3) யாழ்ப்பாணம் (4) திருகோணமலை

21. யாரிடம் செல்வம் சேர்வதில்லை?
(1) கல்வியுடையவனிடம் (2) ஒழுக்கமில்லாதவனிடம்
(3) பொறாமையுடையவனிடம் (4) பண்புள்ளவனிடம்

22. நான் சொல்வது பொய்யா? இது,
(1) கூற்றுவாக்கியம் (2) ஏவல்வாக்கியம் (3) வினாவாக்கியம்
(4) மெய்ப்பாட்டுவாக்கியம்

23. 'தும்பைமலர் நீர்வீழ்ச்சித் தாடி கட்டான நெடுநல் மேனி ' உடையவர்,
(1) சேரன் (2) கயிலைவன்னியன் (3) சோழன் (4) மோசிகீரனார்

24. வேழம் என்பது
(1) புலி (2) மான் (3) யானை (4) சிங்கம்

25. நாம் எதைப் பேசினால் வெற்றி பெற முடியும்?
(1) இன்சொல் (2) சுடுசொல் (3) அடுக்குத்தொடர் (4) இணைமொழி

26. முகிலைக் கிழித்தது எது?
(1)வெள்ளம் (2) கமுகு (3) வாளைமீன் (4)இஞ்சி

27. குரங்குகள் எதைப் பறிக்கின்றன
(1)பலாக்கனி (2) சங்கு (3)இஞ்சி (4) மஞ்சள்

28. உழவர்கள் எதனால் குரங்குகளை விரட்டுகின்றனர்
(1)இளநீர் (2) பலாக்கனி (3) சங்கு (4) கல்

29. சுறாக்களைக் கொம்பினால் சாடுவது எது?
(1)குரங்கு (2) மான் (3) ஆடு (4) எருமை

30. மாறன் பள்ளி சென்றான். இவ்வாக்கியமானது.
(1)தொடர்வாக்கியம் (2)தனிவாக்கியம் (3)கூட்டுவாக்கியம் (4)கலப்புவாக்கியம்

(30 புள்ளிகள்)

# தமிழர் மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு – கல்வியாண்டு 2005-2006

## தமிழ்மொழி

## வினாத்தாள்-பகுதி 1

**ஆண்டு 7** **சுட்டெண்.......................................** **நேரம்: 30 நிமிடங்கள்**

**பலதேர்வு வினாக்களின் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, இக் கூட்டுத்தாளில், அவ்விடைக்குரிய இலக்கத்தின் புள்ளடி (X) இடுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 3 | 4 | 16. | 1 | 2 | 3 | 4 |
| 2. | 1 | 2 | 3 | 4 | 17. | 1 | 2 | 3 | 4 |
| 3. | 1 | 2 | 3 | 4 | 18. | 1 | 2 | 3 | 4 |
| 4. | 1 | 2 | 3 | 4 | 19. | 1 | 2 | 3 | 4 |
| 5. | 1 | 2 | 3 | 4 | 20. | 1 | 2 | 3 | 4 |
| 6. | 1 | 2 | 3 | 4 | 21. | 1 | 2 | 3 | 4 |
| 7. | 1 | 2 | 3 | 4 | 22. | 1 | 2 | 3 | 4 |
| 8. | 1 | 2 | 3 | 4 | 23. | 1 | 2 | 3 | 4 |
| 9. | 1 | 2 | 3 | 4 | 24. | 1 | 2 | 3 | 4 |
| 10. | 1 | 2 | 3 | 4 | 25. | 1 | 2 | 3 | 4 |
| 11. | 1 | 2 | 3 | 4 | 26. | 1 | 2 | 3 | 4 |
| 12. | 1 | 2 | 3 | 4 | 27. | 1 | 2 | 3 | 4 |
| 13. | 1 | 2 | 3 | 4 | 28. | 1 | 2 | 3 | 4 |
| 14. | 1 | 2 | 3 | 4 | 29. | 1 | 2 | 3 | 4 |
| 15. | 1 | 2 | 3 | 4 | 30. | 1 | 2 | 3 | 4 |

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத் தேர்வு – கல்வியாண்டு 2005-2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள்-பகுதி 2**

**ஆண்டு 7** **சுட்டெண்**.................................. **நேரம்: 120 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

## (1) கீழ்வரும் பாடநூல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. எழுவகை ஒலிகளுக்கும் தமிழ் முன்னோர்கள் இட்ட பெயர்கள் எவை?
2. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?
3. முயலார் முயல்கிறார் கதை மூலம் நீர் அறிந்து கொண்டது என்ன?
4. திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைத் தருக?
5. வன்னி மக்களின் தனித்தன்மை யாது?
6. ஏழைப்புலவனுக்கு நாடாளும் மன்னன் கவரி வீசியது ஏன்?

(18 புள்ளிகள்)

## (2) கீழ்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மஞ்சட் குளித்து முக மினுக்கி நல்ல
மாயப் பொடி பூசி நிற்கு நிலை
கஞ்சமகள் வந்து காணிற் சிரிக்குமோ
கண்ணீ ருகுக்குமோ ஆரறிவார்.

1. சூரிய காந்திப்பூ எதனால் முகத்தை மினுக்கியுள்ளது?
2. மாயப் பொடி பூசி நிற்கும் பூ எது?
3. சூரிய காந்திப்பூ யாரை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றது?
4. கதிரவனின் அன்புக்குரியவள் யார்?
5. கஞ்சமகள் வந்து என்ன செய்வாள் எனக் கவிஞர் கூறுகிறார்?

(15 புள்ளிகள்)

## (3) கீழ்வரும் இலக்கண வினாக்களுக்கு விடை தருக?

1. வல்லின எழுத்துக்கள் எவை?
2. வினைமுற்று ஒன்று எழுதுக?
3. சொற்றொடர் ஒன்று எழுதுக?
4. என் அருமை அம்மா வந்தார். இதில் உள்ள அடைமொழியை எழுதுக?
5. குழலி பிட்டும் மாம்பழமும் உண்டாள். இவ்வாக்கியம் எவ்வகையைச் சேர்ந்தது?
6. ஏழொலி என்பதைப் பிரித்து எழுதுக?

(12 புள்ளிகள்)

**(4) பின்வருவனவற்றை வைத்து வாக்கியம் அமைக்குக.**

1. பளபள
2. பொலபொல
3. பாளம்பாளம்
4. கூட்டங்கூட்டம்
5. ஊர்ஊர்

(10 புள்ளிகள்)

**(5) கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதன் கீழுள்ள குறிப்புக்களின் அடிப்படையில் 125 சொற்களைக் கொண்ட கட்டுரை எழுதுக.**

1. கயிலைவன்னியன்

ஆட்சிக்காலம்
ஆட்சியில் தலை வணங்காமல் இருந்தமை
தோமஸ் வான்றி அறிக்கையில் திறை செலுத்தாமல் இருந்தவன்
கண்டி மன்னன் நட்பு
பனங்காமம் பேரரசு
றொபேட் நொக்ஸ் தப்பி ஓடியமை
பெங் சூற்றர், பைல் கோட்டை
இயற்கை மரணம்

2. தலையைக் காத்த தமிழ் என்ற மோசிகீரனார் பாடலைக் கதையாக எழுதுக.

3. தமிழீழம்

தாயகப் பயணம்
பயணக் காட்சிகள்
ஊரின் வளங்கள்
தாயக வளங்கள் - பயிர்கள், கனிகள், தோப்புகள்
சுனாமியின் அழிவுகள்
மக்களின் துன்பம்
மீன்பிடித் தொழில் பாதிப்பு
எனது பயணத்தின் மகிழ்ச்சி

(15 புள்ளிகள்)